KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 2 No. 04 (2023)

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
Vol. 2 No. 04 (2023): Kalanjiyam Nov 2023

காலம் தமிழுக்குத் தந்த கவிஞர் மு. மேத்தா

The Time's Contribution to Tamil : Poet Mu. Metha

Dr. U. Alibava[1*]

[1] Professor and Head, Department of Tamil Studies, Bharathidasan University, Tiruchirappalli – 620024, Tamil Nadu, India. ORCID: https://orcid.org/0000-0002-2051-7002

*தொடர்புக்கு: alibavapkm@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 12 October 2023
Revised: 16 October 2023
Accepted: 19 October 2023
Published: 01 November 2023

Peer review
Double-blind peer review

Keywords
Mu. Metha
Modern Tamil Poetry
Vanampadi Movement
Humanism
Social Awareness
Literary Contribution

ABSTRACT

Mu. Metha is one of the most prominent poets in modern Tamil literature and is widely recognised as a pioneer of modern poetry. He played a significant role in introducing new styles, ideas, and expressions into Tamil poetry and was one of the leading figures of the Vanampadi literary movement. His poetic works reflect humanism, social awareness, love, patriotism, and concern for the oppressed. His first poetry collection, Kanneer Pookkal, received widespread appreciation and established his reputation in the literary world. Through his simple language, creative imagination, realistic expressions, and powerful poetic style, he addressed various social issues, including poverty, unemployment, dowry, political corruption, and social injustice. His literary contributions extend beyond poetry to short stories, novels, essays, film songs, and literary criticism. His collection Aagayathukku Adutha Veedu received the prestigious Sahitya Akademi Award in 2006. His works have also been translated into several languages and are studied in educational institutions. This article explores the life, literary achievements, poetic techniques, social consciousness, and humanistic vision of Mu. Metha, highlighting his invaluable contribution to the growth and development of modern Tamil literature.

How to cite this article: Alibava, U. (2023). காலம் தமிழுக்குத் தந்த கவிஞர் மு. மேத்தா [The Time's Contribution to Tamil : Poet Mu. Metha]. *KALANJIYAM – International Journal of Tamil Studies, 2*(4), 59–66.
Copyright and licence: © 2023 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. https://creativecommons.org/licenses/by/4.0/

காலத்தை வென்று வாழும் வல்லமை படைத்த கவிதைகளுக்குச் சொந்தக்காரரான மு. மேத்தா **'புதுக்கவிதையின் தாத்தா'** என்று தமிழ் இலக்கிய உலகில் எல்லோராலும் அழைக்கப்படுபவர். புதுக்கவிதையில் புதிய நடையைப் பாய்ச்சிய இவர் புதுக்கவிதை உலகின் மூன்றாம் தலைமுறையினராகவும், கோவையிலிருந்து புறப்பட்ட மானுடம் பாடிய 'வானம்பாடி' கவிதை இயக்கத்தின் முன்னோடிகளுள் ஒருவராகவும் திகழ்கிறார்.

05.09.1945 அன்று தேனி மாவட்டம் பெரியகுளத்தில் பிறந்த மேத்தா, 'காதலின் மீது கொண்ட தாகமும், சமூகத்தின் மீது கொண்ட கோபமும் என்னைக் கவிதை எழுத வைத்தவை ' என்கிறார்.

'மலைகளின் இளவரசி' என்று பெயர் பெற்ற கொடைக்கானல் மலையின் அடிவாரத்தில் உள்ள 'பெரியகுளம்' எனும் தம் ஊரைப் பற்றிக் கூறும் மேத்தா, பெரியகுளம் என்னும் சின்னஞ்சிறு ஊரில் பிறந்தவன் நான்; பெரியகுளம் சின்னஞ்சிறு ஊர்தான்! ஆனால் அது தான் என் உலகம்' என்று நெகிழ்ந்தும் பெருமையுடனும் கூறுகிறார்.

எழுத்தையும் வாழ்க்கையையும் வெவ்வேறாகக் கருதி வாழும் இன்றைய உலகில், இரண்டையும் ஒன்றாகவே எண்ணி வாழும் கவிஞர் மேத்தா பல்வேறு அரசுக் கல்லூரிகளில் பல்லாண்டு காலம் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த பழுத்த அனுபவம் மிக்க தமிழறிஞர். இறுதியாக இவர் சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

பெரியகுளம் அரசுப் பள்ளியில் படிப்பைத் தொடங்கிப் பின்னர் மதுரைத் தியாகராசர் கல்லூரியில் பயின்று இளநிலைத் தமிழ் இலக்கியப் பட்டம் பெற்றார். பள்ளி நாட்களிலேயே கையெழுத்துப் பத்திரிக்கை நடத்திப் பாவேந்தர் பாரதிதாசனின் பாராட்டுதலையும் பெற்ற சிறப்புக்குரியவராகவும் இவர் திகழ்கிறார்.

கல்லூரி நாட்களிலேயே ஆசிரியர்களிடம் அணுகிப் பழகித் தம் தமிழ் உணர்வையும், கவிதை ஆற்றலையும் புலப்படுத்தியதுடன், எழுதிய தேர்வைக் கூட மரபுக் கவிதையிலேயே எழுதித் தம் கவிதையுணர்வை வெளிக்காட்டிய திறத்தையும் கவிஞர் மு. மேத்தாவின் ஆசிரியர்கள் நினைவு கூர்வர்.

கல்லூரிப் பேரவைக்கும் தமிழ் மன்றத்திற்கும் நடைபெற்ற தேர்தலில் தம் அணிக்கு வாக்களிக்க விடுத்த வேண்டுகோளைக் கூட,

> செந்தமிழ்போல் இனிக்கின்ற 'ஆண்டியப்பன்'
> சீர்மிக்க பூந்தொட்டி 'போத்தி ரெட்டி'
> குந்தாது செயல்புரியக் குதித்தெ ழுந்து
> குமுறுகிற 'மித்திரன்' நம் அண்ணன் மேலும் '
> வந்திருக்கும் தமிழ்ப்பகையே வா! வா' என்றே
> வரவேற்கும் 'கோபால கிருட்டிண' னோடு '
> சிந்தை அணு ஒவ்வொன்றும் தமிழே' என்று
> சீறுகிற 'மேத்தா'விற் களிப்பீர் வாக்கு!

என்று மரபுக் கவிதையில் விடுத்த தமிழ் உணர்வாளர் மேத்தா. தியாகராசர் கல்லூரியில் பயின்ற பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைத் தமிழ்ப் பட்டம் பெற்றார்.

கவிஞர் மு. மேத்தாவின், "சொல் புதிது; சுவை புதிது' இரும்புப் பெட்டியிலே தூங்கிக் கிடந்த தீந்தமிழை எடுத்து இலக்கிய உலகுக்குப் பரிமாறியவன் பாரதி'! மேத்தாவோ புதுக்கவிதையில் புதிய நடையைப் பாய்ச்சி, யார் இந்த மேத்தா? என்று எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைத்தவர். புதுக்கவிதையின் தரத்தை நிலை

நிறுத்தப் போராட்டம் நடத்திய மிகப் பெரிய புதுக்கவிதை உணர்வாளராகவும் கவிஞர் மு. மேத்தா திகழ்கிறார்.

தமிழ் வாழும் நாடுகளெங்கும் தமிழர் இதயங்களில் வாழும் மேத்தாவின் கவிதை நயமும் சொல்லாட்சியும் மனிதநேயமும் எல்லோரையும் கவரும்; ஈர்க்கும்.

1970-களில் 'தீபம்' இதழில் வெளிவந்த 'தேசப் பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி' என்னும் கவிதையின் வாயிலாகத் தமிழ் இலக்கிய உலகில் கால்பதித்த இவர், பின்னர் தமிழர் நெஞ்சங்களில் நிரந்தரமாகக் குடியேறினார்.

இவருடைய முதல் நூலான 'கண்ணீர்ப் பூக்கள்' முப்பத்தேழுக்கும் மேற்பட்ட பதிப்புக்களையும் பல இலட்சம் பிரதிகளையும் கண்ட பெருமைக்குரிய நூலாகும். பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் ஆகியோரது கவிதைகளுக்கு அடுத்த நிலையில் விற்பனையில் பெருஞ்சாதனை புரிந்த கவிதைகள் மேத்தாவின் கவிதைகள்.

கண்ணீர்ப் பூக்களில் இடம்பெற்றுள்ள கவிதைகள் ஒவ்வொன்றும் விலை மதிப்பற்றவை. ஒவ்வோர் அடியும் உயிர்ப்புள்ளவை! "தாகூரினுடைய கவிதைகளைப் படித்த எஸ்ரா பவுண்டு அவற்றைக் 'கூதிர் காலக் குளிரின் சுகமான தழுவல்' என்று குறிப்பிட்டதே- கண்ணீர்ப் பூக்களைப் படித்ததும் நம் நினைவுக்கு வருகிறது. வாழும் உலகோடு உறவு கொள்ளாத எந்தக் கலையும் மகத்தானதாவதில்லை என்று ஜெரோம் கூறிய உண்மையைப் புரிந்து கொண்டு எழுதும் மேத்தாவைப் போன்ற கவிஞர்கள் தமிழைப் புது வளர்ச்சியில் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கை பிறக்கிறது என்று 'கண்ணதாசன்' மாத இதழ் கூறி மகிழ்ந்தது!.

மேத்தாவின் கவிதை நடை எல்லோரையும் ஈர்க்கும் நடை; மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் உன்னத நடை; சமூகப் பிரக்ஞையைப் படம் பிடித்துக் காட்டும் நடை! இவருடைய நடையில் 'உயிர்த் துடிப்பும் உணர்ச்சிக் கொந்தளிப்பும்' இருப்பதாகப் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் குறிப்பிடுகிறார். இவருடைய நடையே இவரை ஆயிரமாயிரம் ஆண்டுகள் வாழ வைக்கும்! தமிழ்ப் புதுக்கவிதையின் பெருமையைப் பறை சாற்றும்!

வாழை மரத்தையும் செருப்பையும் பேச வைத்த பெருமைக்குரிய மேத்தா, எந்த இலக்கணப் புலவனுக்கும் வேலை வைக்காத எளிய நடைக்குச் சொந்தக்காரர். மேத்தாவின் எளிய நடையே அவரது கவிதையின் தனிச்சிறப்பு - என்கிறார் முனைவர். கவிஞர் பாலா.

மேத்தாவின் கவிதைகளைப் படித்துப் படித்து இரசித்து இரசித்து மகிழ்ந்த தத்துவக் கவிஞர் இ. பதுருத்தீன்,

> "உன் புகழ்க் குத்து விளக்கெரிய
> என் பத்து விரல்களைத் தீக்குச்சியாக்குவேன்!"

என்று மேத்தாவைப் பற்றி எழுதியுள்ளார்.

"எது புதுக்கவிதை?" என்ற வினாவிற்குக் கவிஞர் மு. மேத்தா,

இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி -
இவை எதுவுமே இல்லாத -
கருத்துக்கள் தம்மைத்
தாமே ஆளக்
கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி முறையே
புதுக்கவிதை!

என்று புதுக்கவிதையிலேயே விடை அளித்துத் தன் நடைக்கும் புதிய இலக்கணம் வகுத்துக் கொடுத்தவர்.

இவருடைய வாழைமரம் கூட,

மண்ணில் வேரோடி
மாநிலத்தில் கால் பதித்து
வீசும் புயற் காற்றை
விழும் வரைக்கும்
நின்றெதிர்க்கும்

வல்லமையுடையது. இவரின்,

வாசனை இல்லாத இந்தப் பூக்கள்தாள்
இதயமுள்ள எந்த மனிதனையும்
இன்னொருவருக்காக ஈரப்படுத்தும்

என்னும் அடிகள் எவர் நெஞ்சையும் இன்னொருவருக்காக ஈரப்படுத்தும் சக்தி கொண்டவை.

மேத்தாவின் கற்பனை நயமும் சந்த நயமும் தனித்துவமானவை. 'மானுட ஆண்மைக்கு மண் கொடுத்த சீதனங்கள் மரங்கள்', 'மரங்களில் நான் ஏழை; எனக்கு வைத்த பெயர் வாழை' என்ற வரிகள் இவற்றைக் காட்டுகின்றன.

கற்பனை நயத்துடன் எதார்த்தத்தைத் தம் கவிதையில் பதிவு செய்யும் எதார்த்தவாதி மேத்தா. 'செல்லரித்த மானுடத்தைச் சீர்திருத்தப் பாடினேன், சீர்திருத்தப் பாடியதால் பேரெதிர்ப்பைத் தேடினேன்', 'அற்பர்களின் சந்தையிலே அன்பு மலர் விற்றவன், அன்பு மலர் விற்றதற்குத் துன்ப விலை பெற்றவன்' என்பனவற்றை மேத்தாவின் கவிதைகளில் இருக்கும் எதார்த்தங்களுக்குச் சான்றாகக் காட்டலாம்.

பாரதியைப் போன்ற பரந்துபட்ட பார்வையையுடைய இவர், பாரதியின் அடிச்சுவட்டைத் தான் பின்பற்றியதை நாட்டுப்புற நடையில்,

கொட்டும் மழையினில் வெட்ட வெளிதனில்
குடும்பம் நடத்துகிற - எங்கள்
பட்டினித் தோழரைக் கட்டி அணைத்திட
பாரதி வந்திருந்தான் - அவன்
தொட்ட இடமெல்லாம் வீரம் பிறந்தெங்கள்
தோளைத் தழுவிடவே - நான்
சட்டென ஓடித் தலைவன் அவன்பதம்
நாடிச் சரண் புகுந்தேன்!

என்று எடுத்துக் காட்டுகிறார். பாரதியின் அடிச்சுவட்டைத் தாமும் பின்பற்றியதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

கண்ணீர்ப் பூக்கள், தமிழக அரசின் முதற் பரிசு பெற்ற ஊர்வலம், மனச்சிறகு, அவர்கள் வருகிறார்கள், முகத்துக்கு முகம், நடந்த நாடகங்கள், காத்திருந்த காற்று, ஒரு வானம் இரு சிறகு, திருவிழாவில் ஒரு தெருப்பாடகன், நந்தவன நாட்கள், இதயத்தில் நாற்காலி, என்னுடைய போதி மரங்கள், கனவுக் குதிரைகள், கம்பன் கவியரங்கில், என் பிள்ளைத் தமிழ், ஒற்றைத் தீக்குச்சி, மனிதனைத் தேடி, சாகித்திய அகாதெமி விருது பெற்ற ஆகாயத்துக்கு அடுத்த வீடு ஆகிய பதினெட்டுக் கவிதை நூல்களைப் படைத்துள்ளார். 2006இல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு ' எனும் கவிதைத் தொகுப்பிலும் கவிஞர் மேத்தா, தாய், சுவரொட்டித் தலைவர்கள், ஞானம், கும்பகோணத்தில் மகாவதம், இதயத்தின் தொலைபேசி எனத் தன் முத்திரையைப் பதித்துள்ளார்.

'வெளிச்சம் வெளியே இல்லை' எனும் கவிதைச் சிறுகதைகளால் ஆன நூலினையும், 'மு. மேத்தா சிறுகதைகள்' எனும் சிறுகதை நூலையும், 'சோழ நிலா', 'மகுட நிலா' ஆகிய இரு புதினங்களையும் இயற்றியுள்ளார்.

மு. மேத்தா முன்னுரைகள், நானும் என் கவிதையும், நினைத்தது நெகிழ்ந்தது, பக்கம் பார்த்துப் பேசுகிறேன், புதுக்கவிதைப் போராட்டம், அவளுக்கு ஒரு கடிதம், அன்புடன் - ஆகியன இவருடைய கட்டுரை நூல்கள். 'இதய வாசல்', 'திறந்த புத்தகம்' என்பன இவருடைய பேட்டிகளின் (நேர்காணல்) தொகுப்புகள்.

'நாயகம் ஒரு காவியம்' என நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வியலைப் புதுக்கவிதையில் நயமுடன் காவியமாகப் பாடியுள்ள மேத்தா, நானூறுக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும் எழுதியுள்ளார். மேலும் **'மு. மேத்தாவின் திரைப்படப் பாடல்கள் 1'** எனும் நூலையும் வெளியிட்டுள்ளார்.

எல்லாவற்றையும் சேர்த்து முப்பத்தாறு படைப்புகளை வெளியிட்டுள்ள மேத்தாவின் நூல்கள் - பிற மொழிகளிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. 'Selected Poems of Mu. Metha' ஆங்கிலத்தில் கவிஞர் பாலா (மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழக

ஆங்கிலத் துறைத் தலைவர்) மொழி பெயர்த்திருக்கிறார். 'மனிதனைத் தேடி' கவிதை நூலை டாக்டர் திருமதி ஜமுனா இந்தியில் பெயர்த்துள்ளார். பேராசிரியர், டேவிட் ராஜா போஸ் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். பேராசிரியை தேன்மொழி அவர்கள் ‘நடந்த நாடகங்கள்' எனும் கவிதை நூலினை ஆங்கிலத்தில் 'ENACTED PLAYS' என்று மொழி பெயர்த்துள்ளார்.

பன்முகப் படைப்புத் தளம் கொண்ட மு. மேத்தாவின் கவிதைகள் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பாடமாக வைக்கப்பட்டுப் பல்லாண்டு காலமாகப் பயிலப்படும் சிறப்புக்குரியன,

இவருடைய உயர்நிலைப்பள்ளித் தமிழ் ஆசிரியர்கள் தனியாக எம்.ஏ. பயின்ற காலத்தில், இவருடைய நூல்கள் அவர்களுக்குப் பாடமாக இருந்தன என்பதை அவர்களே குறிப்பிட்டு மகிழ்கின்றனர்.

மேத்தாவின் படைப்புக்களை ஆய்வு செய்து பலர் எம்.ஃபில்., பி.எச்.டி. பட்டங்களைப் பெற்றுள்ளனர்.

தமிழகத்தின் மிகப் பெரிய வாழும் வானம்பாடிக் கவிஞரான மேத்தா - தம்முடைய இதய வாசலைத் திறந்து எல்லோரையும் வரவேற்கும் மகத்தான மனிதர் மட்டுமன்று! மானுடநேயரும் ஆவார்.

ஈரவிழிக் காவியங்கள்
எழுதி வெளியிட்டவன்
எழுதி வெளியிட்டதனால்
இதயங்களைத் தொட்டவன்

என்று சந்த நயத்துடன் எழுதும் மேத்தாவின் கவிதைகளில் சமுதாய அவலங்களும் சமூகப் பிரக்ஞையும் மேலோங்கி நிற்கின்றன.

வைகறைப் பொழுதுக்கு
வார்த்தைத் தவமிருக்கும்
வானம்பாடிகளே-ஓ
வானம்பாடிகளே!
இந்த
பூமி உருண்டையைப்
புரட்டி விடக் கூடிய
நெம்புகோல் கவிதையை
உங்களில்
யார் பாடப்போகிறீர்கள்?

என்று வினாத் தொடுத்து எல்லோரையும் புதுக்கவிதை எழுத அறைகூவல் விடுத்த மேத்தா, மரபில் மண்டிக் கிடந்த தமிழ்ப் புலவர்களையும் அறிஞர்களையும் புதுக்கவிதையின்பால் திருப்பி விட்ட திருப்புமுனைக் கவிஞராகவும், தமிழ் இலக்கியத்தின் விடி வெள்ளியாகவும் திகழ்கிறார்.

மாணவப் பருவத்திலேயே தம் வாழ்வின் தனி அங்கமாய்க் கவிதைகளை ஆக்கிக் கொண்ட மேத்தாவின் கவிதைகளில் காணப்படும் எளிமையான வெளிப்பாடே அவர் கவிதைகளின் 'உயிர் நாடி'யாக அமைந்துள்ளது.

செருப்புடன் ஒரு பேட்டி', 'வாழை மரம்', 'மரம்', 'சுயதரிசனம்', 'அரளிப்பூ அழுகிறது' போன்ற கவிதைகள் அந்நாட்களிலேயே எல்லோரையும் கவர்ந்தவை. 'பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா 'பெற்றுத் தந்த சுதந்திரத்தை, இன்றைய அரசியல்வாதிகள் பிச்சைப் பாத்திரமாக்கிய அவலத்தை,

அமுத சுரபியைத் தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம்

என்று பதிவு செய்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் போடப்படும் திட்டங்கள் - ஏழைகளைச் சென்றடையாமல் மீண்டும் பண முதலைகளையே சென்றடைவதைக் கண்ட மேத்தா இதனை,

அணைக் கட்டுகளில்
திறக்கப்படும் தண்ணீர்
பள்ளங்களை ஏமாற்றிவிட்டு
மேட்டை நோக்கியே
பாய்கிறது

என்று சுட்டிக் காட்டுகிறார்.

வறுமையில் வாழும் ஏழைகள், சுரண்டும் அரசியல் வாதிகள், வரதட்சணைக் கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம், தன்னம்பிக்கை, மனித உணர்வு மற்றும் மனித நேயம் பற்றி எழுதியுள்ள மேத்தா - பாரதியைப் போன்று தமிழ், தமிழன், தமிழ்நாடு, இந்தியா, உலகம் என்னும் பரந்துபட்ட பார்வைகளைத் தம் கவிதைகளுக்குப் பாடுபொருள்களாய் அமைத்துக் கொண்டவர்.

சொந்த தேசத்தவரை மட்டுமன்றி அன்னிய தேசத்தவரையும் நேசிக்கும் உள்ளம் கொண்ட மேத்தா, தம் கவிதைகளில் ஏகாதிபத்திய எதிர்ப்புடன் - ஈராக், ஈழம், போன்ற நாடுகளைப் பற்றிய தம் உணர்வுகளையும் வெளியிடுகிறார். தொடர்ந்து தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தினாலும் உலகெங்குமுள்ள மானுடம், எங்கு காயப்படுத்தப் பட்டாலும் அங்கங்கெல்லாம் நோக்கி அவர்களின் காயங்களுக்குத் தம் கவிதைகளால் மருந்துபோடும் சர்வ தேசியக் கவிஞராகவும் மேத்தா திகழ்கிறார்.

கவிதை, சிறுகதை, நாவல், திரைப்படப் பாடல், வசனம், இலக்கிய இதழியல் எனப் பலதுறைகளிலும் புலமையுடைய மேத்தா நண்பர்களுடன் சேர்ந்து 'தென்றல் வரும் தெரு' என ஒரு திரைப்படமும் தயாரித்துள்ளார்.

'சாகித்திய அகாதெமி விருது' (2006), 'தமிழக அரசு விருது', 'தமிழக அரசின் பாவேந்தர் விருது', 'எம்.ஜி.ஆர். நினைவு விருது', 'கலைமாமணி விருது', 'இலக்கிய வேந்தர் விருது' (கொழும்பு தமிழ்ச் சங்கம்), 'கவிவேந்தர் விருது', தமிழக அரசின் 'கண்ணதாசன் விருது', முரசொலி அறக்கட்டளை வழங்கும் 'கலைஞர் விருது' எனப் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள கவிஞர் மு.மேத்தாவின் கவிதைகள் காலத்தை வென்று வாழும் வல்லமையுடையவை.